தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 14-10-2014

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேங்காய் மற்றும் கொப்பரையை உடனே விற்கலாம்

இந்தியாவில், தோட்டப்பயிர்களில் தென்னை சாகுபடி 59 சதவீத பரப்பு பங்களிப்புடன் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில், மொத்த தோட்டப்பயிர்களில் 73 சதவீதம் பரப்பில் தேங்காய் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாடு மொத்த தேங்காய் உற்பத்தியில் இரண்டாம் இடத்தையும், உற்பத்தி திறனில் எக்டருக்கு 10.24 டன்கள் காய்கள் உற்பத்தி செய்து முதலிடத்தை வகிக்கிறது. கர்நாடகா மற்றும் கேரளாவின் உற்பத்தி திறன் முறையே 8.12 டன்கள் காய்கள் மற்றும் 5 டன்கள் காய்களாகும்.

தற்போது தேங்காய் டன் ஒன்றுக்கு ரூ.27,800 வரை பண்ணை விலையாக பொள்ளாச்சி சந்தையில் விற்கப்படுகிறது. கேரளாவில் ஓணம் பண்டிகைக்கு பிறகு தேங்காய் எண்ணைக்கு மாற்றாக, பாமாயில் மற்றும் சூரியகாந்தி எண்ணையின் பயன்பாடு அதிகரித்துள்ளது. மேலும், தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருளாக தேங்காய் எண்ணைக்கு பதிலாக பாமாயில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இதற்கு காரணம், இவற்றின் ஒப்பீட்டு விலை தேங்காய் எண்ணையின் விலையை விட குறைவாகும். கர்நாடகாவிலிருந்து வரத்து அக்டோபர் முதல் ஜனவரி வரையிலும் கேரளாவிலிருந்து வரத்து ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை இருக்கும். வர்த்தகர்களின் கூற்றுபடி, வரும் பண்டிகை காலங்களில் தேங்காயின் உள்நாட்டு தேவை அதிகரிப்பினால் விலை நிலையாக இருக்கும். தேங்காய் வளர்ச்சி வாரியத்தின் கணக்கீட்டின் படி, தேங்காய் உற்பத்தி 2014-15ல் 9 சதவீதமாக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும், பருவமழையால் எதிர்காலத்தில் தேங்காய் உற்பத்தி அதிகரிக்கும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தேங்காயின் குறைந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தேவை அதிகரிப்பால் கொப்பரையின் விலை 2012ல் கிலோவிற்கு ரூ.60 -75 முதல் ஆகஸ்டு, 2014 வரை

ரூ.100 -120 ஆக உயர்ந்துள்ளது. தற்போது கொப்பரை கிலோவிற்கு ரூ.100 - 104 வரை அவல்பூந்துறை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விற்கப்படுகிறது. இவ்விலை சரிவிற்கான காரணம் தேங்காய் எண்ணை விலை உலகளவில் ஜுன் முதல் செப்டம்பர், 2014 வரை 16 சதவீதமாக குறைந்துள்ளது.

இச்சூழலில் வருகின்ற மாதங்களில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலை பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 12 ஆண்டுகளாக பொள்ளாச்சி சந்தையில் நிலவிய தேங்காயின் விலை மற்றும் கடந்த 14 ஆண்டுகளாக அவல்பூந்துறை சந்தையில் நிலவிய கொப்பரையின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், பொள்ளாச்சி பகுதியில் பண்ணை விலை நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் சராசரி காய் (550 - 600 கிராம் எடை) ஒன்றுக்கு ரூ.15 முதல் ரூ.17 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. சிறந்த தரத்தின் காரணமாக பொள்ளாச்சி சந்தையில் தேங்காயின் விலை அதிகமாக இருக்கும். மற்ற சந்தைகளில் பொள்ளாச்சி சந்தையை விட காய் ஒன்றுக்கு ரூ.1 முதல் ரூ.3 வரை குறைவாகவே இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. கொப்பரையின் விலை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கிலோவிற்கு ரூ.101 முதல் ரூ.103 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தேங்காய் மற்றும் கொப்பரையை உடனே விற்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி -0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்